# நன்றும் தீதும்!

## வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்! 11

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

சில தினங்களுக்கு முன்னர் ஹைதராபாத்தில் இளம் பெண் டாக்டருக்கு நடந்த கொடுமை குறித்து ஃபேஸ்புக்கில் நான் எழுதிய எச்சரிக்கைப் பதிவுக்கு 'அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒன்றிரண்டு தீய செயல்கள் நடைபெறுவதால் ஆண்கள் எல்லோருமே கெட்டவர்களாகிவிட மாட்டார்கள்' என ஒரு நண்பர் பின்னூட்டம் எழுதியிருந்தார்.

'அந்த ஒன்றிரண்டு கொடூரங்கள் நமக்கே நடந்துவிடலாம் என்ற பதற்றம் இல்லாமல் எப்படிப் பயணிக்க முடியும்? எச்சரிக்கை உணர்வுடன் இருப்பது நல்லதுதானே' என கருத்திட்டிருந்தேன்.

தீய விஷயங்கள் ஒன்று சேரும் அளவுக்கு நல்ல விஷயங்கள் ஒன்று சேர்வதில்லை. தீய விஷயங்களைச் செய்பவர்கள் ஈகோ இல்லாமல் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்து தீய காரியங்களை சாதித்துக்கொள்கிறார்கள். நற்செயல்களைச் செய்பவர்களுக்குள் ஒற்றுமை இருப்பதில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஈகோ இருக்கத்தான் செய்கிறது. தனித்தனியாக பெயர் வாங்கவும், பாதை அமைக்கவும் ஆசைப்படுவதால் நல்ல விஷயங்கள் பெரிய அளவில் நடைபெறுவதும் இல்லை. அவை பேசப்படுவதும் இல்லை. சொல்வதற்குக் கசப்பாக இருந்தாலும், இதுதான் உண்மை.

'ஒருவன் தனியா இருந்தா தப்பு செய்ய தோன்றும். நான்கு பேரோடு சேர்ந்திருந்தால் அவர்களில் ஒருவன் நல்லவனாக இருந்தாலும் போதும்... மற்றவர்களை அவன் கெட்டது செய்ய விடமாட்டான். தவறுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு' என பெரியோர்கள் சொல்லுவதைக் கேள்விப்பட்டிருப்போம். இன்று அந்த லாஜிக் மாறிவிட்டதே. நான்கு பேர் சேர்ந்திருக்கும்போது நடக்கும் தவறுகள் பெருகிவிட்டனவே.

ஓர் உண்மை சம்பவத்தின் அடிப்படையில் 2014ம் ஆண்டு நான் எழுதிய 'மனதை Format செய்யுங்கள்' என்ற சுய முன்னேற்ற நூலில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தேன்.

சென்னையின் பரபரப்பான பகுதியில் ஒரு முன்னிரவு நேரத்தில், புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த கட்டிடத்துக்கு அருகே, நான்கு இளைஞர்கள் அமர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகே, ஒரு நாய் 8 குட்டிகளை ஈன்றிருந்தது.



அவர்களில் ஒருவன் ஒரு குட்டி நாயின் மீது கல்லைவிட்டு எறிய, தாய் நாய்க்கு வந்ததே கோபம். அவர்களைப் பார்த்து ஆக்ரோஷமாகக் குரைக்க ஆரம்பித்தது. அந்த இளைஞர்களுக்கு வந்ததே கோபம். அந்த இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த செங்கற்களால் அந்த குட்டி நாய்களை அடித்தே கொன்று விட்டார்கள். தாய் நாய் எவ்வளவு போராடியும் தன் குட்டிகளைக் காப்பாற்ற முடியவில்லை.

இறந்த எட்டு குட்டி நாய்களும் வரிசையாகப் படுத்திருக்க, தாய் நாய் ஏக்கத்தோடு அவற்றைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கும் புகைப்படத்தோடு இந்த செய்தியை வெளியிட்டிருந்தார்கள். உள்ளத்தை உருக்கும் காட்சியாக அது இருந்தது.

நாயாக இருந்தாலும், அந்த இளைஞர்களுக்கு அதைப் பெண் நாயாக மட்டுமே பார்க்க முடிந்திருக்கிறது. அதனால்தான் அதைப் பழிவாங்கும் எண்ணத்தில், பிறந்து சில மணி நேரங்களே ஆகியிருந்த பிஞ்சு நாய்க்குட்டிகளைக் கொன்று வெறியைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லவர்கள் பெருக வேண்டும். நல்லவை செழிக்க வேண்டும். நற்செயல்கள் செய்பவர்கள் இணைய வேண்டும். அப்போதுதான் தீயவை குறைய கொஞ்சமாவது வாய்ப்பு உண்டாகும்.

சில தினங்களுக்கு முன்னர் 70 வயதை நெருங்கும் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் ஒரு தொழில்நுட்ப உதவிக்காக என்னைத் தொடர்பு கொண்டார். பேசிக்கொண்டிருந்தபோது, பத்திரிகைத் துறையில் அவரது பல நண்பர்களை நினைவு கூர்ந்து, அவர்களது பண்புகளைப் புகழ்ந்து பேசினார். ஒரு நாள் அவர் நண்பர் ஒருவரை சந்திக்க ஒரு பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்றபோது, முக்கிய பொறுப்பில் இருக்கும் அவரின் ஜூனியர் ஒருவர் இவரைப் பார்த்தவுடன் தன்னுடைய இருக்கையிலிருந்து எழுந்து வந்து வரவேற்று உபசரித்து அன்புடன் பேசி நலன் விசாரித்ததைச் சொன்னார். ''இந்த நிகழ்ச்சி எனக்கு இன்னமும் நெகிழ்ச்சியாக உள்ளது'' என்றார்.



இப்படி பலரது செய்கைகள் நமக்கு நெகிழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருப்பதை நாமும் பல நேரங்களில் உணர்ந்திருப்போம்.

''ஒரு கல்யாணத்துக்குச் சென்றபோது வயது முதிர்ந்த ஒரு மாமி என்னை அடையாளம் கண்டுகொண்டு என்னிடம் வந்து நலம் விசாரித்தார். அந்த மாமி பாவம்... கால் நடக்க முடியாமல் நடந்து வந்து பேசியது எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. நம் மீது இவ்வளவு அன்பா என சந்தோஷமாக இருந்தது!''

''வழக்கமாகச் செல்லும் அந்த காய்கறி அங்காடியில் பழம் விற்கும் பையன் என் விருப்பம் அறிந்து நல்ல பழமாக எடுத்து அவனே ஒரு பையில் போட்டு உதவியது எனக்கு சந்தோஷம்!''

''கோயிலுக்குச் சென்றபோது தீபாராதனை காண்பித்துக்கொண்டிருந்தார்கள். நான் வாசலில் இருந்து ஓடி வருவதை கவனித்த குருக்கள், எனக்காகக் காத்திருந்து விபூதி, குங்குமம் கொடுத்தார். ரொம்ப ரொம்ப பெருமையா இருந்துச்சு.''

''ஆட்டோ டிரைவர் ஒருவர், நான் அவர் ஆட்டோவில் ஏறியதிலிருந்தே பதட்டமாக இருப்பதை கவனித்தார். 'ஏனம்மா இந்தப் பதட்டம்? பதட்டமா இருந்தா நினைச்சதை செய்ய முடியாது. கொஞ்சம் பொறுமையா இருங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும்' என்று ஆறுதலாகப் பேசியபோது பிரச்னையின் வலி பாதியாகிவிட்டது. எத்தனை நல்ல குணமுள்ள ஆட்டோ டிரைவர்.''

இப்படியான செய்கைகளையும், வார்த்தை உபசரிப்புகளையும் எங்கோ ஓரிரு இடங்களில்தான் இன்று காணமுடிகிறது. இவை இனிமையான பாடல்களின் பின்னணி இசை போல நம் மனதுக்குள் ரீங்காரமிட்டபடி, வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக நம்மை ஊக்கப்படுத்திக்கொண்டே இருக்கும்.

ஒரு சின்ன பாசிட்டிவான வார்த்தை, மரியாதைக்குரிய செயல்பாடு, அன்று முழுவதும் நாம் செய்கின்ற பணிகளுக்கு ஊக்கம் அளிப்பதை பல நேரங்களில் உணர்ந்திருப்போம். இதுபோன்ற சந்தோஷங்களை நாம் பிறருக்கும் அளிப்பதில் கஞ்சத்தனம் காட்ட வேண்டாமே!

எப்படி சின்னச் சின்ன சந்தோஷ நினைவுகள் வாழ்நாள் முழுவதும் நம் நினைவில் நின்று மகிழ்விக்கின்றனவோ, அதுபோலதான் வருந்தத்தக்க நினைவுகளும் நம் மனதை நெருடலாகவே உறுத்திக்கொண்டிருக்கும். எப்போதும் அது குறித்தே சிந்திக்கவில்லை என்றாலும்கூட, அதேபோன்ற அனுபவங்களை எதிர்கொள்ளும்போது அந்த நினைவுகள் வந்து அச்சுறுத்தும். பாதுகாப்பாக பயணிக்க அந்த அச்சுறுத்தல்கூட அவசியம்தானே! ●

### இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!

நல்லவர்கள் பெருக வேண்டும். நல்லவை செழிக்க வேண்டும். நற்செயல் செய்பவர்கள் இணைய வேண்டும். அப்போதுதான் தீயவை குறைய கொஞ்சமாவது வாய்ப்பு உண்டாகும்.



காம்கேர் கே.புவனேஸ்வரி